# <u>அறிவித்தல்</u> A

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "**மரண தண்டனையை இல்லாதொழித்தல்**" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அறிவிக்க விரும்புகிறேன்.

அரசியலமைப்பின் 120 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சட்டமூலமொன்றின் அரசியலமைப்புக்கு இயைபானதன்மை குறித்து தெரிவிப்பதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அரசியலமைப்புச்சார்ந்த நியாயாதிக்கம் இல்லையென்பதால் இந்த மூன்று மனுக்களையும் உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.